1973 டிசம்பர் 1]

பரிசீலனை செய்யப்பட்டு அது ஓட்டுவிக்கின்ற முதலுக்கும் அதற்கும் ஈடுகட்டி வராது என்ற காரணத்தால் குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அதை விற்றுவிடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி ஊராட்சி ஒன்றியம் அனுப்பி இருக்கிறது. அதைக் குறைந்த விலைக்குப் பல பேர் கேட்ட காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுத்து விடலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. அதைப் பழுது பார்ப்பதைவிட புதிதாக வாங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையில் பாலம்.

* 564 வினா—திரு. அ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையின் 3/7 மைலிலுள்ள பாலம் போக்குவரத்துக்காக எப்போது திறந்து வைக்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாலவேலை 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவுபெற்றது. இப்பாலத்திற்கான அணுகு சாலைகளைப் போட துணை மதிப்பீட்டுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு வேலையை எடுத்துக்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

Buses from Egmore, Central Stations.

* 565 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to run special bus service to assist the passengers at Egmore and Central Stations in the Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) ஆம். இரயில் வண்டிகளின் போக்குவரத்து நேரங்களுக்கு ஏற்ற வகையில், பல்லவன் போக்குவரத்துக் கழகம் 7—6—1973 முதற்கொண்டு, எழும்பூருக்கும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்குமிடையில் இரண்டு தனிப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளைத் தொடங்கியுள்ளது.